**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 2 /2020**

**Prosecution Witness : 7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. துரைராஜ்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. பெருமாள்** | **Calling** | : | |
| **Village** | : | **திருமைய கவுண்டன் பட்டி** | **Religion** | : | **இந்து** |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **55** |
| | | | **Dated** | : | **13.02.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**A3, A6, A7 present. A1, A2, A5 absent, petition filed and allowed. A4 died (CA). Both side counsels present.**

**பட்டியல் சாட்சி 8 திரு. துரைராஜ் ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அ.சா. 7 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜராகதர்களை பொறுத்த வரையில் பெயர் தெரியாது, நேரில் பார்த்தால் சொல்ல முடியும். அசா. 1, 2, 3 ஆகியோரை தெரியும். முருகன் வகையறா மற்றும் பால்பாண்டியன் வகையறாவிற்கு தகராறு ஏற்பட்டு பால்பாண்டியனுக்கு தலையின் வலது பகுதியில் கடப்பாரை மற்றும் கம்பியால் தாக்கியதில் காயம் ஏற்பட்டு மதுரை மீனாட்சி மிசின் மருத்துவமனையில் சேர்த்து இருப்பதாக கேள்விப்பட்டு 13.11.2013 ம் தேதி மருத்துவமனைக்கு காலை 11.00 மணிக்கு சென்று பார்த்தேன். அப்போது செம்பட்டி போலீசார்

பால்பாண்டி அணிந்து இருந்த இரத்தம் படிந்த வெள்ளை வேஷ்டி, கருப்பு கோடு போட்ட ஊதா சட்டை ஆகியவற்றை போலீசார் என் முன்னிலையில் கைப்பற்றி, கைப்பற்றுதல் மகஜரில் கையெழுத்து வாங்கினார்கள். நீதிமன்றத்தில் காட்டப்படும் இரத்தம் படிந்த வெள்ளை வேஷ்டி, கருப்பு கோடு போட்ட ஊதா சட்டை ஆகியவை அதுதான். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். என்னுடன் மனோகரன் என்பவரும் போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

எதிரி தரப்பில் தகுந்த வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை இல்லை எனக் கூறினார்.

R KANAGARAJ

Digitally signed by R KANAGARAJ
Date: 2025.02.14 10:41:51 +0530